கான்வாஸ் செய்கிறார்கள். அதோடு கூட அந்த பஸ்களில் பணம் கொடுக்கிற அளவுக்கு அவர்கள் டிக்கெட் போட்டுக் கொடுப்பதே இல்லை. அதனாலே அந்த டிக்கெட்டுகள் பற்றிய கணக்கு வருவதில்லை. ஆகவே, இப்படி அரசினருக்கு வருகின்ற வருமானத்தை பல முறைகளின் மூலம் தடுக்கின்ற இந்த நிலையில் இப்படிப்பட்ட பஸ்கள் ஓடுவதை தடுத்து நிறுத்துவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்த நிலைமைகளை சர்க்கார் ஆழ்ந்து கவனித்து வருகிறது. நானே கூட இப்படிப்பட்ட பேரூந்துகளில் ஒன்றை இடையிலே மறித்து, அதிகாரிகளை விட்டு சோதனை செய்யச்சொன்ன நேரத்தில், அதில் வந்தவர்கள் அத்தனை பேர்களும், அந்த டிரைவர், கண்டக்டர், எடுத்துச் சொன்னபடி அந்தக் குழுவின் தலைவர் சொல்லச் சொல்லியும், மறுத்து உண்மையைக் கூறிவிட்டார்கள். ஆம்னிபஸ் சொந்தக்காரர்களின் இந்தப் போக்கைக் கவனித்தால், அந்த பஸ்களை தடை செய்யலாமா என்ற யோசனை சர்க்காருக்கு இருந்து வருகிறது.

Secretariat Staff Co-operative Bank

* 220 Q.—THIRU K. CHEEMAICHAMY :
THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether any representations were received by the Chief Secretary from the Members of the Madras Secretariat Staff Co-operative Bank during December 1967 alleging irregularities in the running of bank; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) & (இ) : தலைவர் அவர்களே, கேள்வியில் குறிப்பிட்டிருக்கிற முறையீடு, தலைமைச் செயலருக்கு, 1967 டிசம்பரில் கிடைக்கவில்லை. ஆனால், 1968 ஜனவரியில் கிடைத்தது. குற்றச்சாட்டு, செயற்குழுக் கூட்டம் நடைபெறவில்லை என்பது. அதன்மீது கூட்டுறவுத் துறை அதிகாரி விசாரணை நடத்தி, தக்க நடவடிக்கை எடுத்திருக்கிறார்.

திரு. கரு. சீமைச்சாமி : சார், அமைச்சரவர்கள், மீட்டிங் நடக்கவில்லை என்றார்கள். ஆனால், நடந்து, மோசடி நடந்திருக்கிறது. அதில் சம்பந்தப்பட்ட உதவிச் செயலர்கள் எத்தனைபேர் ? அவர்கள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள உறுப்பினர்கள் எல்லோரும் கூட்டம் போட்டு, செயற் குழுவை அப்புறப்படுத்தி, தனி அதிகாரியைப் போட்டு, நிர்வாகத்தை நடத்த வேண்டும் என்று கேட்டதற்கு இணங்க, நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. கையாடல்பற்றி, காவல் துறை அதிகாரிகள் இன்னும் விசாரித்து வருகிறார்கள்.

1969 செப்டம்பர் 11]

திரு. கே. விநாயகம் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். நாங்கள் கேள்விகள் போடுகிறோம் : பதில்களை அமைச்சர்கள் சொல்லுகிறார்கள். அவரவர்களுடைய அலுவலகங்களிலிருந்து கொடுக்கப்பட்டிருக்கும் ஃபைல்களை வைத்துக் கொண்டு அவற்றிலிருந்து எங்களுக்குத் தகவல்களைக் கொடுக்கிறார்கள். ஆனால், கூட்டுறவு அமைச்சரிடம் மட்டும் ஃபைல்களே இல்லை. (சிரிப்பு). ஏதோ, மளிகைக் கடையில் போல (குறுக்கீடு) . . . . I withdraw that word ஏதோ சிறு காகிதத் துண்டுகளில் அந்த நேரத்திற்கு வேண்டியதைக் கொடுப்பதாகக் காண்கிறதேயல்லாது, அதிகார பூர்வமாக, அரசாங்கத்தில் கொடுக்கப்படும் தகவல்களாக இல்லாமல், அவரே ஏதோ தனக்கு உதித்த எண்ணங்களைக் கொடுப்பதாகத்தான் தெரிகிறது . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. அமைச்சர்கள் விடை கொடுக்க வேண்டும் என்று இருக்கிறதேயல்லாது, எதிலிருந்து கொடுக்கிறார்கள் என்பதைக் கேட்க முடியாது. கொடுக்கும் தகவல் தவறாக இருந்தால், அங்கத்தினர்கள் சுட்டிக்காட்டலாம். அதற்கான நடவடிக்கை எடுக்க விதிமுறைகள் இருக்கின்றன. அவர்கள் காகிதத்தில் எழுதி வைத்துக்கொண்டு சொல்கிறார்கள் என்று சொல்ல முடியாது. காகிதம் இல்லாமலே கூட, நல்ல நினைவாற்றல் இருந்தால், அப்படியும் விடைகளை கொடுக்கலாம்.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : அந்தக் காகிதத்தில் கோமாளிப் படங்கள் கூடப் போடப்பட்டிருக்கின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைமைச் செயலருக்கு முறையீடுசெய்து தனி அதிகாரி போட்ட பிறகும், சரியாக விசாரிக்கவில்லை என்ற முறையீடு அரசாங்கத்திற்கு வந்ததா ? ஊழலில் சம்பந்தப்பட்டவர்கள் யாராக இருந்தாலும், அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். விரைவாக நடவடிக்கை எடுக்க அரசாங்கம் ஆவன செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : பின் நடவடிக்கை பற்றிக் கேட்கிறார்கள். அதுபற்றி தக்க நடவடிக்கை எடுக்கப்படும். முன்னால் நடந்ததுபற்றிப் புகார்கள் வந்து, **65-வது விதியின்படி,** ரெஜிஸ்ட்ரார் அவர்கள் பரிசீலனை செய்து, அதற்கு வேண்டிய விசாரணையும் செய்திருக்கிறார்கள். காவல் துறையிலும், யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, விசாரணை செய்கிறார்கள். துப்பறிவு இன்னும் முடிவாகவில்லை.

Committee on Co-operation

* 221 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Co-operation be pleased to state when the Government expects to get the first and final reports from the Committee on Co-operation ,headed by Thiru K. Santhanam as Chairman?